A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 47 / 2023**

திருமதி D. பாத்திமா நேரு,
w/o. திரு வின்செண்ட்,
4A, அருளானந்தபுரம், பாலக்கரை,
திருச்சி – 620 001 .

………மேல்முறையீட்டாளர்
(திருமதி D. பாத்திமா நேரு)

எதிர்

1) செயற்பொறியாளர்/ இ&கா/ நகரியம்/திருச்சி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய வளாகம், தேனூர், திருச்சி – 620 017.

2) உதவி செயற்பொறியாளர்/ இ&கா / பாலக்கரை,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய வளாகம், தேனூர், திருச்சி – 620 017.

3) உதவி மின்பொறியாளர்/ இ&கா / மகாலஷ்மி நகர்,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய வளாகம், தேனூர், திருச்சி – 620 017.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு K.A. முத்துகுமரன், செயற்பொறியாளர்/ இ&கா/ நகரியம்/திருச்சி
திரு R. கிருபாகரன், உதவி செயற்பொறியாளர்/ இ&கா / பாலக்கரை
திரு C. ஜெயராணி, உதவி மின்பொறியாளர்/ இ&கா / மகாலஷ்மி நகர்)

**மனு பெறப்பட்ட நாள்: 14-06-2023**

**கேட்புரை நாள்: 17-08-2023**

**ஆணை நாள்: 08-09-2023**

21.06.2023 அன்று பெறப்பட்ட திருமதி D. பாத்திமா நேரு, க/பெ. வின்செண்ட், 4A, அருளானந்தபுரம், பாலக்கரை, திருச்சி – 620 001 அவர்களின் மனு மேல்முறையீட்டு

மனு எண் 47/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 17.08.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

1. **<u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

மின் இணைப்பு எண் 214–003–38–இன் வீதப்பட்டியை 1D–இலிருந்து 1 A–க்கு மாற்றித் தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **<u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 தனது மின் இணைப்பு எண் 214–003–38–ஆனது 1 A –இலிருந்து 1 D –க்கு மாற்றப்பட்டதை தொடர்ந்து அதனை மீண்டும் வீதப்பட்டி 1 A–க்கு மாற்றித் தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரின் இடத்தை களஆய்வு செய்த போது முதல் தளத்தின் உட்புறத்தில் இருந்து மனுதாரரது குடும்பத்தினர் மட்டுமே பயன்படுத்தும் வகையில் இரண்டாவது தளத்தில் Duplex model house கட்டப்பட்டுள்ள ஒரு அறைக்கு மின் இணைப்பு எண் 214–003–38 பயன்படுத்தி வருவது தெரியவந்துள்ளதால் வீதப்பட்டி 1D–க்கு மாற்றப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே தனது மின் இணைப்பின் வீதப்பட்டியை மாற்றக் கோரி மேல்முறையீட்டாளர் திருச்சி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 28.02.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருச்சி மின்பகிர்மான வட்டம் 29.03.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 மன்றத்தின் தீர்வு :

3.1 திருச்சி மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 29.03.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*
*இரு தரப்பு ஆவணங்களையும் சாட்சிகளையும் விசாரித்த மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள். விகிதப்படி ID–லிருந்து விகிதப்படி 1A–க்கு மாற்றக்கோரி மனுதாரர் கோரும் மின் இணைப்பு எண்: 06–213–003–38 ஆனது எவ்வித குடியிருப்புக்கான முகாந்திரமும் இல்லாத நிலையில் மனுதாரருடைய குடும்பத்தினரால் உபயோகப்படுத்தப்பட்டு வருவது கண்டறியப்பட்டது. ஆகவே, தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தால் 10.09.2022 முதல் அமல்படுத்தப்பட்ட புதிய கட்டண விதிகளின் படி இரண்டாம் தளத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த மின் இணைப்பு எண் 06–213–003–38. யை விகிதப்படி 1D லிருந்து விகிதப்படி 1A – க்கு மாற்றம் செய்ய முடியாது என மனுதாரருக்கு எடுத்துரைக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது.*

*மேலும், மனுதாரர் பின்னாளில் இரண்டாம் தளத்தை வாடகைக்கு விடும் பட்சத்தில் வாடகை தாரரிடம் வாடகை பத்திரம் பதிவிட்ட சான்று, வாடகை தாரரின் அடையாள அட்டை, ரேசன் அட்டை போன்றவற்றை சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகத்தில் மனுதாரர் சமர்ப்பித்து இரண்டாம் தளத்தை குடியிருப்பு பகுதியாக பயன்படுத்தும் பட்சத்தில் மின் இணைப்பு எண்.06–213–003–38 யை விகிதப்படி 1D – லிருந்து விகிதப்படி 1A – க்கு மாற்றி அமைக்கும்படி எதிர் மனுதாரருக்கு வலியுறுத்தப்பட்டு மன்றம் முடித்து வைக்கப்பட்டது."*

## 4.0 மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 17.08.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திருமதி D. பாத்திமா நேரு, க/பெ. வின்செண்ட், அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொள்ள இயலவில்லை எனவும், சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு K.A. முத்துகுமரன், செயற்பொறியாளர்/ இ&கா/ நகரியம்/திருச்சி, திரு R. கிருபாகரன், உதவி செயற்பொறியாளர்/ இ&கா / பாலக்கரை மற்றும் திரு C. ஜெயராணி, உதவி மின்பொறியாளர்/ இ&கா / மகாலஷ்மி நகர், திருச்சி

ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 இரண்டாம் தளத்தில் உள்ள குடியிருப்புக்கான மின் பயன்பாட்டை 1A–லிருந்து 1D–க்கு மாற்றியதற்கு பின்வருமாறு குறுஞ்செய்தி 06.10.2022 அன்று தனக்கு அனுப்பப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

*"SC Number 06-214-003-38 used for common supply has been converted from tariff 1A to 1D as per Tariff order effective from 10.9.2022 – TANGEDCO – 17.24."*குறுஞ்செய்தி 25 நாட்கள் தாமதமாக அனுப்பப்பட்டது எனவும், அக்குறுஞ்செய்தியில் பொதுப்பயன்பாட்டில் உள்ள மின் இணைப்பாக தெரிவிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவிதுள்ளார்.

5.2 இரண்டாவது தளத்தில் உள்ள மின் இணைப்பு பொதுப் பயன்பாட்டில் இல்லை எனவும், அங்கு உள்ள வீடு மற்றும் அதனைச்சார்ந்த பயன்பாட்டிற்காக மட்டும் பயன்படுத்தப்படுகிறது என தான் தெரிவித்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவிதுள்ளார்.

5.3 உடனே மின்பகிர்மான அலுவலர்கள் தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு முதல் ஆய்விற்கு பிறகு கூடுதலாக வெளிப்புறத்தில் ஒரு கழிவறை மற்றும் குளியலறை பத்து ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது எனவும், ஒரு கட்டிடம் கட்டிய பிறகு அது புதுக் கட்டிடமா அல்லது பழைய கட்டிடமா என்பதை ஒரு சாதாரன மனிதர் கூட

கண்டுபிடித்து விடுவர் எனவும் அப்படியிருக்க பொறியாளர்கள் எவ்வாறு இப்படி தவறாக கவனித்தார்கள் என்பது தனக்கு வியப்பாக உள்ளதாகவும், தாங்கள் மேற்கொண்ட நிலைப்பாட்டிற்கு வலுசேர்ப்பதற்காகவா என்பது தனக்கு தெரியவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்ப்பில் இரண்டாம் தளத்தில் உள்ள மின் இணைப்பு எண்: 06-213-003-38 ஆனது எவ்வித குடியிருப்புக்கான முகாந்திரமும் இல்லை எனவும், இரண்டாம் தளம் பத்து ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகவும், அப்போதே கழிவறையும், குளியலறையும் கட்டப்பட்டது எனவும், கள ஆய்வு செய்யாமல் அவசர கதியில் 6.10.2022 அன்று குறுஞ்செய்தி அனுப்பி 17.9.2022 முதல் விகிதப்படி 1A இல் இருந்த மின் இணைப்பை 1D க்கு மாற்றினார்கள் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 தான் தொடர்ந்து கடிதம் எழுதியும் எந்தவித பதிலும் இல்லை எனவும், விகிதப்படி கடிதம் எழுதியும் எந்தவித பதிவும் இல்லை விகிதப்படி 1Dயின்படி 3.8.22 முதல் 7.12.22 வரை பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தை 6310 – 5960 =350 யூனிட் என தவறாக நான்கு மாதங்களுக்கு ரூ.2166/- என கணக்கிட்டு தொகையை செலுத்த வற்புறுத்தியதால் அவர் பணம் செலுத்தவில்லை எனவும், மின் இணைப்பு 11.2.2023 அன்று துண்டிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 இரண்டாம் தளம் குடியிருப்பதற்கு ஏற்ற வகையில் கழிவறை, குளியலறை என பத்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உள்ளதாகவும், தற்போது மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு உள்ளதால் இரண்டாம் தளத்தில் உள்ள வீட்டை வாடகைக்கு விட இயலாமல் உள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 தான் நேரில் வர இயலாத காரணத்தால் மேல்முறையீட்டு மனுவோடு இணைத்துள்ள தன் கடிதங்களை நன்கு பரிசீலித்து மின் இணைப்பு எண். 214-003-38 விகிதப்படி 1D யில் இருந்து 1 A க்கு எவ்வித நிபந்தனையும் இன்றி 10.9.22இல் இருந்து மாற்றி தருமாறும் மின் கட்டண நிலுவைத் தொகையை விகிதப்படி 1A இல் கணக்கிட்டு தெரிவித்தால் அதனை உடனே செலுத்த உடன்படுவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

6.0 **<u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>**:

6.1 மனுதாரர் குடியிருப்பில், தரை தளத்திற்கு மின் இணைப்பு எண். 214–003–1081–ம் முதல் தளத்திற்கு மின் இணைப்பு எண். 214–003–1082–ம் பயன்பாட்டில் உள்ளன எனவும், மேலும் முதல் தளத்தின் உட்புறத்தில் இருந்து மனுதாரரது குடும்பத்தினர் மட்டுமே பயன்படுத்தும் வகையில் இரண்டாவது தளத்தில் (Duplex Model House) கட்டப்பட்டுள்ள ஒரு அறைக்கு மின் இணைப்பு எண். 214–003–38 பயன்படுத்தப்பட்டு வந்ததும் கள ஆய்வின் போது தெரியவந்துள்ளதாகவும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி ஒரே வளாகத்தில் "Permanent Physical Segregation" இருந்தால் மட்டுமே தனித்தனி மின் இணைப்புகள் வழங்க இயலும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 இந்நிலையில், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக Tariff Order எண். 07/09.09.2022–ன்படி குடியிருப்புகளில் பொது பயன்பாட்டிலுள்ள மின் இணைப்புகளை விகிதப்படி 1A–ல் இருந்து 1D–க்கு மாற்ற கள ஆய்வு மேற்கொண்ட போது, மனுதாரரது குடியிருப்பு வளாகத்தில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளுக்கு மாறாக, கூடுதலாக "Permanent Physical Segregation" இல்லாத Duplex வீட்டுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த மின் இணைப்பு 214–003–38 ஆனது விகிதப்படி IA–ல் இருந்து ID–க்கு மாற்றப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 அம்மின்னிணைப்பினை, மீண்டும் விகிதப்படி 1A–க்கு மாற்றக்கோரி திருச்சி பெருநகர வட்ட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனுதாரர் சமர்பித்த மனுவின் அடிப்படையில், 29.03.2023 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகவும், மேற்படி மின்இணைப்பானது தனி குடியிருப்பிற்கான முகாந்திரம் ஏதும் இல்லாமல் மனுதாரரது குடும்பத்தாராலேயே ஒரு அறைக்கு பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் அதனை மீண்டும் 1A–க்கு மாற்ற இயலாது என்றும், இரண்டாவது தளத்தினை மனுதாரர் வாடகைக்கு விடும் பட்சத்தில், உரிய ஆவணங்களை சமர்பித்து, இரண்டாம் தளத்தினை முழுமையான குடியிருப்பாக பயன்படுத்தப்படும் பட்சத்தில் மின் இணைப்பினை வீட்டு உபயோகத்திற்கான விகிதப்படி 1A–க்கு மாற்றித்தர, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற தலைவர் அவர்களால் 03.04.2023 அன்று உத்தரவிடப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 அதனைத் தொடர்ந்து, கீழ்கையொப்பமிட்டவரால் மனுதாரரது குடியிருப்பு வளாகமானது 05.04.2023 அன்று ஆய்வு செய்யப்பட்டபோதும், முதல் தளத்தின் உட்புறத்திலிருந்து Duplex மாடலில் கட்டப்பட்ட மனுதாரரது குடும்பத்தாரால் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு அறைக்கு மட்டுமே மின் இணைப்பு பயன்படுத்தப்படுவது உறுதி செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி, "Permanent Physical Segregation" இல்லாத Duplex மாடலில் கட்டப்படும் வீட்டிற்கு ஒரு மின் இணைப்பு மட்டுமே வழங்க இயலும் – மனுதாரரது குடியிருப்பு வளாகத்தில் Duplex மாடலில் கட்டப்பட்டுள்ள வீட்டிற்கு ஒரு மின் இணைப்பு மட்டுமே வழங்க இயலும் என்பதால் கூடுதலாக பெறப்பட்டுள்ள ஒரு மின் இணைப்பானது விகிதப்படி ID–க்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், தற்போதைய பயன்பாட்டு நிலையில் மனுதாரரது கோரிக்கையினை ஏற்க இயலாது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திருமதி D. பாத்திமா நேரு, க/பெ. வின்சென்ட், 4A, அருளானந்தபுரம், பாலக்கரை என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், இரண்டாவது தளத்தில் உள்ள குடியிருப்புக்கான மின் இணைப்பு எண் 06–214–003–38 மின்பயன்பாட்டை வீதப்பட்டி 1A–யிலிருந்து 1D–க்கு மாற்றிவிட்டதாகவும், அதற்கான குறுஞ்செய்தி 25 நாட்கள் தாமதமாக அனுப்பப்பட்டதாகவும், அக்குறுஞ்செய்தியில் பொது பயன்பாட்டில் உள்ள மின் இணைப்பாக தெரிவிக்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 இரண்டாம் தளம் பத்து ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகவும், அப்போதே கழிவறையும், குளியலறையும் கட்டப்பட்டது எனவும், கள ஆய்வு செய்யாமல் அவசர கதியில் 6.10.2022 அன்று குறுஞ்செய்தி அனுப்பி 17.9.2022 முதல் விகிதப்படி 1A இல் இருந்த மின் இணைப்பை 1D க்கு மாற்றினார்கள் எனவும், இரண்டாவது தளத்தில் உள்ள மின் இணைப்பு பொது பயன்பாட்டில் இல்லை எனவும், அங்குள்ள வீடு மற்றும் அதனை

சார்ந்த பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்படுவதாகவும், எனவே வீதப்பட்டி 1D–க்கு மாற்றப்பட்ட மின் இணைப்பு எண் 06–214–003–38–ஐ மீண்டும் வீதப்பட்டி 1A–க்கு மாற்றித் தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

7.4 3.8.2022 முதல் 7.12.2022 வரை பயன்படுத்தப்பட்ட மின்சாரத்திற்கு வீதப்பட்டி 1D–யில் கணக்கிட்டு தொகையை செலுத்த வற்புறுத்தியதால் அவர் பணம் செலுத்தவில்லை எனவும், மின் இணைப்பு 11.2.2023 அன்று துண்டிக்கப்பட்டதாகவும், தற்போது மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு உள்ளதால் இரண்டாம் தளத்தில் உள்ள வீட்டை வாடகைக்கு விட இயலாமல் உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 தான் நேரில் வர இயலாத காரணத்தால் மேல்முறையீட்டு மனுவோடு இணைத்துள்ள தன் கடிதங்களை நன்கு பரிசீலித்து மின் இணைப்பு எண். 06–214–003–38–இல் விகிதப்படி 1D யில் இருந்து 1A–க்கு எவ்வித நிபந்தனையும் இன்றி 10.9.22இல் இருந்து மாற்றி தருமாறும் மின் கட்டண நிலுவைத் தொகையை விகிதப்படி 1A–இல் கணக்கிட்டு தெரிவித்தால் அதனை உடனே செலுத்த உடன்படுவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.6 எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் குடியிருப்பு வளாகத்தில் கள ஆய்வு மேற்கொண்ட போது மின் இணைப்பு எண். 06–214–003–38, 06–214–003–1081 மற்றும் 06–214–003–1082 ஆகிய மூன்று மின் இணைப்புகள் திருமதி பாத்திமா நேரு என்ற பெயரில் பயன்பாட்டில் உள்ளதாகவும், அவற்றில் மின் இணைப்பு எண்கள் 06–214–003–1081 மற்றும் 06–214–003–1082 ஆகியவை தரைதளம் மற்றும் முதல் தளத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், இரண்டாவது தளத்தில் ஒரே ஒரு அறையில் குடியிருப்புக்கான எந்தவித சாதனங்களுமின்றி ஒருமுனை மின் இணைப்பு எண் 06–214–003–38 பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேலும், தரைதளத்திற்கும் முதல்தளத்திற்கும் உரிய நிரந்தர புறநிலை தனிமைப்பட்ட இடங்களாக இருப்பதாகவும், முதல் தளத்திலிருந்து இரண்டாவது தளத்திற்கு Duplex model–இல் கட்டப்பட்டு உட்புறத்திலிருந்து படிகட்டுகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரரது குடும்பத்தாரரால் மட்டுமே பயன்படுத்தப்பட்டு

வரும் ஒரு அறைக்கு மட்டுமே மின் இணைப்பு பயன்படுத்தப்படுவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 இதுசம்பந்தமாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதித் தொகுப்புகளில் கூறப்பட்டுள்ள வரையறைகள் ஆராய விரும்புகின்றேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"27.Requisitions for Supply of Energy:*
>
> *(14) Where more than one person or more than one establishment is or intended to be in occupation of a door number or sub door number, more than one service connection will be given only if there is a permanent physical/ electrical segregation of areas for which different service connections are applied for.*
>
> *In case of flat system and shopping complexes where more than one flat or shops are located with permanent physical segregation, more than one service shall be given.*
>
> *(15A) Notwithstanding anything contained in sub-regulations (14) and (15), a person or an establishment or an entity shall be given only one service connection in a premises or in contiguous premises to run a business or service or occupation or another form of activity including its associated activities and for activities of the associates even if there is a permanent physical segregation."*

7.9 மேற்கண்ட விதி 27(14)–ன் படி ஒரு கதவிலக்கத்தின் அல்லது துணைக்கதவிலகத்தில், ஒன்றுக்கும் மேற்பட் நபரோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனமோ குடியிருக்கும் பொழுது அல்லது குடியிருக்க முற்பட்டாலோ பல மின்னிணைப்புகளுக்கு விண்ணப்பித்த நேர்வுகளில் அவை நிரந்தரமாக புறநிலை தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் தனித்தனி மின்பிரிவுகள் இருப்பின், ஒன்றுக்கு மேற்பட்ட மின்னிணைப்புகள் தரப்படும் என்றும், விதி 27(15)ன்படி அடுக்குமாடி வீடுகளையும் வணிக வளாகங்களையும் பொருத்தவரையில், ஒன்றுக்கும் மேற்பட்ட அடுக்ககங்களோ கடைகளோ வெளிப்படையாக நிரந்தரமாகப் பிரித்துவைக்கப்பட்டிருந்தால் ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னிணைப்புகள் தரப்படும் என்றும், மற்றும் விதி 27(15A)ன்படி (14) மற்றும் (15)ஆம் ஒழுங்குமுறைவிதிகளில் எப்படி இருந்தபோதிலும், ஒரு நபர் அல்லது நிறுவனம் அல்லது தனித்தன்மையான நிறுவனம் ஆகியவற்றிற்கு ஒரு வளாகத்தில் அல்லது சேர்ந்திருக்கும் வளாகங்களில், அவை நிரந்தரமாக புறநிலை தனிமைப்பட்ட இடங்களாக இருந்தாலும், ஒரு தொழிலுக்கோ அல்லது சேவைக்கோ அல்லது பணிக்கோ அல்லது அதன் ஐக்கிய பணி நடவடிக்கைகள் உள்ள வேறுவிதமான அமைப்பில் இருக்கும் நடவடிக்கைகளுக்கோ,

மற்றும் சார்ந்தவர்களின் பணிகளுக்கோ ஒரே ஒரு மின்னிணைப்பு மட்டுமே தரப்படும் என்று அறியமுடிகிறது.

7.10 மேற்கூறிய விதிகளின்படி ஒன்றுக்கு மேற்பட்ட மின்னிணைப்பு ஒரு கதவிலக்கத்தில் ஒருவருக்கு வழங்க வேண்டும் என்றால் நிரந்தரமாக தனிமைப்படுத்தப்பட்ட இடங்களாக இருக்க வேண்டும் என தெரிய வருகின்றது. எதிர்மனுதாரர் கள ஆய்வு செய்த போது மேல்முறையீட்டாளரின் வளாகத்தில் மூன்று மின் இணைப்புகள் பயன்பாட்டில் இருந்ததாகவும், முதல் தளம் மற்றும் இரண்டாவது தளம் Duplex model–இல் உட்புறமாக படிகட்டுகள் அமைக்கப்பட்டு உரிய permanent physical segregation இல்லாமல் இருப்பதால் ஒரு மின் இணைப்பு மட்டுமே வழங்க இயலும் எனவும், கூடுதலாக பெறப்பட்ட ஒரு மின் இணைப்பானது வீதப்பட்டி 1D–க்கு மாற்றப்பட்டதாக தெரிய வருகிறது.

7.11 மேலும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் Tariff Order No. 7 of 2022 in T.P. No. 1 of 2022 dtd. 09.09.2022 effective from 10.09.2022 தற்சமயம் வழங்கிய ஆணையில் மேற்கூறிய விதிகளின் அடிப்படையில் ஆய்வு செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்பது கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதில் கூறப்பட்டவை கீழே விவரிக்கப்படுகிறது.

*"6.2.2 Low Tension Tariff I-A : (Domestic, Multi-tenements, Old age homes, Handlooms)*

6.2.2.1 இந்தக் கட்டணமானது பின்வருவனவற்றிற்குப் பொருந்தும்:

குடியிருப்பு நோக்கங்க*ளுக்கான என்பது* விளக்குகள், மின்விசிறிகள், ஏர் கண்டிஷனர்கள், டிவி மற்றும் பிற அனைத்து வீட்டு உபயோகப் பொருட்க*ளாகும்*. "குடியிருப்பு அலகு" என்பது குடியிருப்பு நோக்கத்திற்காக தனித்தனியான வசதிகள், சமைத்தல் மற்றும் கட்டிடத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம். நிரந்தர மற்றும் மின்சாரப் பிரிப்புடன் *இருந்த* ஒரு *தனிதளத்திற்கும்* /குடியிருப்பு *அலகுக்கும்* ஒரே ஒரு சேவை இணைப்பு மட்டுமே அனுமதிக்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட சேவைகள் ஏற்கனவே இருந்தால், இந்த கட்டணத்தின் வகைப்பாட்டின் கீழ் ஒரு சேவை மட்டுமே தக்கவைக்கப்படும். *மற்ற மின் இணைப்புகள் அணைத்தும் கட்டண* சேவைக*யாக Tariff 1D ஆக மாற்றப்பட்டு* அதற்கேற்ப கட்டணம் வசூலிக்கப்படும். *மேலும்* TNE விநியோகக் குறியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நிரந்தர மற்றும் மின்சாரப் பிரிப்புடன் *இருந்த* ஒரு *தனிதளத்திற்கும்* /குடியிருப்பு *அலகுக்கும்* மிகவும் நன்றாக ஆய்வு செய்யப்பட்டு, *அதனை உறுதி செய்யலாம்"*

என விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

7.12 இவ்வழக்கைப் பொறுத்தவரை எதிர்மனுதாரரின் கள ஆய்வின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் கட்டிடம் நிரந்தரமாக புறநிலை தனிமைப்படுத்தப்பட்ட இடமாக இல்லாததாகவும், ஒரே குடும்பம் முதல்தளம் மற்றும் இரண்டாவது தளத்தையும் பயன்படுத்துவதாகவும் உறுதி செய்ததன் அடிப்படையிலும், மேலும் முதல்தளத்திலிருந்து இரண்டாவது தளத்திற்கு உட்புறமாக செல்லும் படிகட்டு உள்ளது என்றும் தெரியவருகிறது.

7.13 மேல்முறையீட்டாளரின் வீடானது உள்பக்கம் படிகட்டு அமைப்பு கொண்ட முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் (Duplex Model) அமைப்பாக தெரிய வருகின்றது. முதல்தளத்திற்கும் இரண்டாவது தளத்திற்கும் நிரந்தர பிரிவு இல்லை என்பது உறுதியாகின்றது. ஆகவே, மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான மின் இணைப்பு எண் 06-214-003-38-ஐ வீதப்பட்டி 1D-யிலிருந்து 1A-க்கு மாற்றித் தருமாறு கோரும் கோரிக்கை நிராகரிக்கப்படுகின்றது.

**8.0 <u>முடிவுரை</u> :**

8.1 மேற்கூறிய பத்திகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான மின் இணைப்பு எண் 06-214-003-38-ஐ வீதப்பட்டி 1D-யிலிருந்து 1A-க்கு மாற்றிதருமாறு கோரும் கோரிக்கை நிராகரிக்கப்படுகின்றது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 47/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**“No Consumer, No Utility”**

<u>பெறுநர்</u>

1. திருமதி D. பாத்திமா நேரு, – By RPAD
w/o. திரு வின்செண்ட்,
4A, அருளானந்தபுரம், பாலக்கரை,
திருச்சி – 620 001.

2. செயற்பொறியாளர்/ இ&கா/ நகரியம்/திருச்சி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய வளாகம், தேனூர், திருச்சி – 620 017.

3. உதவி செயற்பொறியாளர்/ இ&கா / பாலக்கரை,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய வளாகம், தேனூர், திருச்சி – 620 017.

4. உதவி மின்பொறியாளர்/ இ&கா / மகாலஷ்மி நகர்,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய வளாகம், தேனூர், திருச்சி – 620 017.

5. . மேற்பார்வை பொறியாளர், – By Email
**திருச்சி** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மன்னார்புரம் மெயின் ரோடு, திருச்சி – **620 020.**

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.